# ஆண்டாள் கோபுரப்பணிக்கு 3 கிலோ தங்கம் நன்கொடை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.27-

ஸ்ரீவி., ஆண்டாள் கோயிலில், தங்க விமான பணிக்காக, பக்தர்கள் சார்பில் 3 கிலோ தங்கமும், 10 லட்சரூபாயும் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஸ்ரீவி., ஆண்டாள் கோயிலில் மூலஸ்தான கோபுரத்திற்கு தங்கத்தால் தகடுகள் அமைக்கும் பணிகள், நாச்சியார் சேரிட்டபிள் சார்பில் கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக நடந்து வருகிறது. இதற்காக, பல்வேறு வெளி நாடுகள், வெளி மாநிலங்களிலிருந்து பக்தர்கள் தங்கத்தை காணிக்கையாக வழங்கி வருகின்றனர்.

சென்னையை சேர்ந்த வாஸ்து நிபுணர் ஆண்டாள் சொக்கலிங்கம் ஏற்கனவே இரு முறை பக்தர்களிடமிருந்து திரட்டிய தங்கம், பணம் ஆகியவற்றை, டிரஸ்ட் நிர்வாகிகளிடம் வழங்கினார். மூன்றாவது முறையாக, நேற்று காலை பக்தர்களிடம் திரட்டிய 3 கிலோ தங்கம், 10 லட்சம் ரூபாய் பணத்தை கோயில் தக்கார் ரவிச்சந்திரனிடம் வழங்கினார்.